DEPOSITION OF W ITNESS

| | | |
|---|---|---|
| **In the court of** | **:** | District Munsif – cum – Judicial Magistrate Court, Pennagaram. |
| **Case No.** | **:** | CC No. 12/2023 |
| **Prosecution witness** | **:** | PW - 1 |
| **Date** | **:** | 20.12.2024, |

| | | | |
|---|---|---|---|
| **Name** | : Rajendhiran | **Cast** | : |
| **Father's Name** | : Ganapathigounder | **Calling** | : |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : |

(A1 absent. A2,A3 present. 355 PFA)

**வாக்குமூலம்**

| | | |
|---|---|---|
| நீதிமன்றம் | : | மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், பென்னாகரம். |
| வழக்கு எண். | : | ஆ.ப.எண். |
| வழக்கு சாட்சி | : | |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : | ஜாதி | : |
| தந்தை பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுக்கா | : | வயது | : |

( 1 ம் எதிரி ஆஜரில் இல்லை. 2,3 ம் எதிரிகள் ஆஜரில் இருந்தனர். 355 மனு தாக்கல் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.)

அரசு வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார்.

**குறுக்கு விசாரணை**

1. நான் தற்போது மேட்டுரான்கொட்டாயில் வசித்து பெங்களூல் கூலி வேலை செய்து வருகிறேன். சம்வமானது சீலநாயக்கனூரிலுள்ள சொத்தில் நடந்தது என்றால் சரிதான். சம்பவம் நடந்த சீலநாயக்கனூரிலுள்ள சொத்திற்கும், எதிரிகள் குடியிருக்கும் இடத்திற்கும் இடையே சுமார் 1 km இருக்கும் என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு மேட்டுரான் கொட்டாய், சீலநாயக்கனூரில் சொத்து உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்தின் விஸ்தீரணம் 2 ஏக்கர் என்றால் சரிதான். சம்பவ தினமான 20.07.2020

ம் தேதி இரண்டு  டிராக்டரை சம்பவ இடத்திற்கு  வெளியூரிலிருந்து அழைத்து வந்தேன் என்றால் சரியல்ல. பென்னாகரத்திலிருந்து அழைத்து வந்தேன்.

2. நான் குடியிருக்கும் மேட்டுரான் கொட்டாயிலிருந்தோ, சீலநாயக்கனூரிலிருந்தோ டிராக்டரை வரவழைக்காமல் பென்னாகரத்திலிருந்து டிராக்டரை வரவழைக்க அவசியம் என்னவெனில் நான் முழு நிலத்தையும் ஓட்ட வில்லை எனக்கு ஒதுக்கப்பட்ட அனுமந்தனிடம் பெற்ற நிலம் மற்றும் அனுமந்தன் நிலத்தை ஓட்டினேன். சம்பவத்தன்று 1,2 எதிரிகள் நிலத்தில் அத்துமீறி நுழைந்து நிலத்தை ஓட்டினேன் என்றால் சரியல்ல.  நான் அனுமந்தனிடம் நிலத்தை விலைபேசிய வாங்கியதாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. அதற்குண்டான ஆவணங்கள் எனது வசம் உள்ளது.  தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். சம்பவத்தன்று  இரண்டு டிராக்டரில் ஒன்றில் அனுமந்தன் நிலத்தையும், மற்றொன்றின் மூலம் பழனி நிலத்தையும் ஒட்டினேன் என்றால் சரியல்ல.

**சாட்சியிடம் எதிரிகள் தரப்பில் ஏற்கனவே குவிமுச பிரிவு 311 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வீடியோ பதிவுகளை கண்டு அதனை கண்டு சாட்சி அதிகப்படியாக கோபப்பட்டால் வழக்கு விசாரணையானது தொடர முடியாத நிலையில் வழக்கு விசாரணையானது ஒத்திவைக்கப்படுகிறது.**